**வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 21 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்ரெம்பா 13 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் என்னால் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா செட்டிக்குளம் பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் சொத்துக்களின் ஆரம்ப மீதியில் உள்ள சொத்துக்கள் பௌதிகரீதியாக இல்லாதபோதும் வருட இறுதியில் சொத்துக்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டமையால் 31/12/2016 இல் உள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,772,052 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வை ரூபா 2,655,937 ஆக இருந்தபோதும் அரசிறை கடனாளிகள் கணக்கில் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வையாக ரூபா 2,554,280 காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 101,657 வேறுபாடு ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டியவை

13 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுள் வேத நன்கொடை ரூபா 43,700 பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை | |
| (i) 153 விதி | கிடைக்க வேண்டிய வருமதிகளின் கூற்று (பி.ச.7) தயாரிக்கப்படவில்லை. |
| (ii) 165 விதி | பிரதான ஏட்டில் பொறுப்புக்கள் வருமான மற்றும் செலவினங்கள் என்பன பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 44,928 நீண்ட காலமாக உள்ள போதும் நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 1990 ஒக்டோபர் 10ந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 41/90, 02-1ஆம் பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 2,319,247 ஆக விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகையாக ரூபா 7,950,470 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 5,631,223 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீட்டு மதப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமைலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 ஆதனவரி

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்**

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் வவுனியா நீதி மன்றத்தினால் 2016 டிசம்பர் 31 வரை சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,088,770 பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

**2.2.4 முத்திரைக்கட்டணங்கள்**

சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வை ரூபா 2,554,280 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் 06 வாகனங்கள் நீண்ட காலமாக பாவனையிலில்லாத போதும் பொது நிதித் திணைக்களத்தின் 10.07.2015 திகதிய 02/2015 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

(ஆ) சபையில் காணப்படும் 18 வாகனங்களின் உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத போதும் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக இவ்வறிக்கைத்திகதி வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) கடந்த ஆண்டு வருடாந்த கணிப்பீட்டுச் சபைபயில் பாவனையிலீடுபடுத்த முடியாது எனக் குறிப்பிட்ட 210 பொருட்கள் தொடர்பாக 438ம் இலக்க 2009.11.13ம் திகதிய பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய இவ்வறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) மீளாய்வாண்டில் சபையினால் NELSHIP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடைத்தொகுதி அமைத்தல் வேலையானது ஒப்பந்தக்காரரினால் ரூபா 7,008,023 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் பௌதிகரீதியான கணக்காய்வு பரிட்சிப்பின் போது கடைத்தொகுதியிலுள்ள எல்லாக் கடைகளிலிலும் Beam மட்டத்திலும் மற்றும் நிலைக்குத்ததாகவும் 03 வெடிப்புக்கள் காணப்பட்டன. முன் வராண்டாவிலும் கிடையாக 03 இடங்களில் வெடிப்பக்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பெரியதம்பனை திறந்த பொதுக்கிணறு அமைத்தல் வேலைக்காக ரூபா 331,547 செலுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வு பரீட்சிப்பின் போது 06 வெடிப்புக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட மருக்காரம்பளை திறந்த பொதுக்கிணறு அமைத்தல் வேலைக்காக ரூபா 390,469 செலுத்தப்பட்டிருந்தும் ஏழு வெடிப்புக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பிரமணாளங்குளம் திறந்த பொதுக்கிணறு அமைத்தல் வேலைக்காக ரூபா 334,434 செலுத்தப்பட்டு திறந்த கிணறு அமைத்தல் வேலையானது 14.11.2016ல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் 22.06.2017 வரை பாவனையிலீடுத்தப்படவில்லை.

**2.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்**

**(அ) துட்டுவாகை சந்தை கட்டட திருத்த வேலை**

மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட துட்டுவாகை சந்தை கட்டட வேலைக்காக ரூபா 297,262 செலுத்தப்பட்டு 28.12.2016ல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 22.06.2017 வரை பாவனையிலீடுத்தப்பட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொதுநூலக திருத்தம் செட்டிக்குளம் (துடரிக்குளம்)**

மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பொது நூலக திருத்தவேலைக்காக ரூபா 496,011 செலுத்தப்பட்டு 28.12.2016ல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் 22.07.2017 வரை பாவனையிலீடுத்தப்பட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 ஆளணிப் பற்றாக்குறை – 2016**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 62 ஆக இருந்தபோதும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை 47 ஆக உள்ளதுடன் பற்றாக்குறை 15 ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு.

(ii) நிலையான சொத்துக்கள்

(iii) முற்பணப் பெறுகைகள்

(iv) முற்பணக் கொடுப்பனவுகள்

(v) மூலதன வேலைகள்

(vi) பிரதான பேரேட்டுப் பராமரிப்பு